

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், சன் குழுமத்தின் தலைவர் கலாநிதிமாறன் ஆகியோர் நேற்று முன்தினம் (11.10.2024) பெசன்ட் நகர், மின் மயானத்தில், முரசொலி செல்வம் அவர்களின் உடலுக்கு மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.

தரையிறங்குவதில் சிக்கல் என்ற தகவல் அறிந்தவுடன் முதல்வர் துரித நடவடிக்கை!

# திருச்சி - ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானத்தை பாதுகாப்பாக தரையிறக்கிய விமானி - விமானக் குழுவினருக்குப் பாராட்டு!

## முதல்வர் மு.க.ஸ்டாலின் சமூக வலைதளப்பதிவு!

சென்னை, அக். 13–

திருச்சியிலிருந்து சார்ஜா புறப்பட்ட விமானத்தில் திடீர் கோளாறு ஏற்பட்டதால் அந்த விமானம் திருச்சியிலே தரையிறங்க முயற்சி மேற்கொள்ளப்பட்டது. ஆனால் விமானத்தில் சிக்கல் ஏற்பட்டதைத் தொடர்ந்து விமானம் திருச்சி வானத்தில் இரண்டு மணி நேரம் வட்டமடித்தப்படியே இருந்தது.

இச்செய்தியறிந்ததும் முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் அலுவலர்களுடன் உடனடியாக தொலைபேசி வாயிலாக அவசரக் கூட்டத்தை கூட்டி முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து திருச்சியில் விமானம் பத்திரமாக தரையிறங்கியதும் முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் பாதுகாப்பாக விமானத்தை தரையிறக்கிய விமானி மற்றும் விமானக் குழுவினருக்கு பாராட்டை தெரிவித்து சமூக வலைதளங்களில் பதிவு செய்துள்ளார்.

இது குறித்து முதல்வர் அவர்களின் சமூக வலைதளப்பதிவு வருமாறு

**ஏர் இந்தியா எக்ஸ்பிரஸ் விமானம் பாதுகாப்பாகத் தரையிறங்கியதை அறிந்து நிம்மதி அடைந்தேன். தரையிறங்குவதில் சிக்கல் என்ற தகவல் கிடைத்ததும், அலுவலர்களுடன் உடனடியாக தொலைபேசி வாயிலாக அவசரக் கூட்டத்தைக் கூட்டி, தீயணைப்பு வாகனங்கள், ஆம்புலன்ஸ்கள், மருத்துவ உதவிகள் எனத் தேவையான அனைத்துப் பாதுகாப்பு நடவடிக்கைகளையும் தயார்நிலையில் வைத்திட அறிவுறுத்தி இருந்தேன்.**

**பயணிகள் அனைவரும் தொடர்ந்து பாதுகாப்பாக இருப்பதை உறுதிசெய்யவும், அவர்களுக்கு மேற்கொண்டு தேவைப்படும் உதவிகளை வழங்கவும் மாவட்ட ஆட்சியரிடம் தற்போது கூறியுள்ளேன்.**

**பாதுகாப்பாக விமானத்தைத் தரையிறக்கிய விமானி மற்றும் விமானக் குழுவினருக்கும் எனது பாராட்டுகள்!**

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சமூக வலைதளப் பதிவில் குறிப்பிட்டுள்ளார்.

### சிவகங்கை மாவட்டத்தில் கழகத்தினர்

# வாக்காளர் பட்டியல் சரிபார்ப்புப் பணியில் தீவிரமாக ஈடுபடுவீர்!

## அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் வேண்டுகோள்!

சிவகங்கை. அக் 13-

சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளரும் கூட்டுறவுத் துறை அமைச்சருமான கே.ஆர்.பெரியகருப்பன் விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ள தாவது.

கழகத் தலைவர் தமிழ் நாடு முதலமைச்சர் தளபதி அவர்கள் அறிவுறுத்தலின் படி வருகிற 29. 10 .2024 அன்று புகைப்படத்துடன் கூடிய வரைவு வாக்காளர் பட்டியலை தேர்தல் ஆணையம் வெளியிட உள்ளது. சிவகங்கை மாவட்டத்தில் நான்கு சட்டமன்றத் தொகுதிகளிலும் 29.10.2024 முதல் 28.11.2024 வரை புதிய வாக்காளர் சேர்க்கவும், மற்றும் பெயர்கள் நீக்கவும், திருத்தம், முகவரி மற்றும் மனு செய்ய கால அவகாசம் கொடுக்கப் பட்டுள்ளது. இது தவிர 9.11.2024, 10.11.2024, ஞாயிற்றுக்கிழமை 23.11.2024 சனிக்கிழமை



24.11.2024 ஞாயிற்றுக் கிழமை ஆகிய நான்கு நாட்களில் சிறப்பு முகாம் நடைபெற உள்ளது. இந்த நாட்களில் விடுபட்ட வாக்காளர்களின் பெயர்கள், இடம் மாறிய வாக்காளர்கள், 1.1.2025 ல் 18 வயது நிரம்பிய புதிய வாக்காளர்களும் தங்கள் பெயர்களை சேர்க்க, நீக்க, திருத் தங்கள் மேற்கொள்வதற்கான படிவங்களை பெற்று பூர்த்தி செய்து அந்தப்படிவங்களை அந்தந்த வாக்குச் சாவடி முகாம்களில் கொடுக்க வேண்டும்.

இதன் அடிப்படையில் 2025 ஆண்டு ஜனவரி 1ஆம் தேதி 18 வயது முழுமை அடைந்தவர் களின் பெயர் களையும்புதிதாக குடிபெயர்ந் துள்ள வாக்காளர் களின் பெயர்களைவாக்காளர் பட்டியலில் சேர்க்கவும், தொகுதியிலிருந்து இடம் பெயர்ந்தவர்கள் மற்றும் இறந்தவர்கள் பெயர்களை தற்போது உள்ள வாக்காளர்பட்டியலலிருந்து நீக்கவும் தீவிர நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என கேட்டுக் கொள்கிறேன். சிவகங்கை மாவட்டத்தில் உள்ள 4 சட்டமன்றத் தொகுதிகளில் உள் ள மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பேரூர் கழகச் செயலாளர்கள், தலைமைச் செயற் குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பின் பிரதிநிதிகள் அனைத்து அணிகளின் நிர்வாகிகள், கிளைக் கழக வார்டு கழக ஊராட்சி கழக செயலாளர்கள் வாக்குச்சாவடி நிலை குழு முகவர்கள், பூத் கமிட்டி உறுப்பினர்கள், மற்றும் நிர்வாகிகள் இந்த வாய்ப்பினை பயன்படுத்தி முழுமையாக வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு பணியில் தீவிரமாக ஈடுபடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

இந்த வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பான மேற்கொண்ட பணி விவரங்களை மாவட்ட கழக அலுவலகத் திற்கு தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.



கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன், சிவகங்கை மாவட்டம், சிங்கம்புணரி வட்டம், ஏரியூர் கிராமத்தில், நடைபெற்ற மக்கள் தொடர்பு முகாமில், வேளாண்மைத் துறையின் சார்பில் விவசாயிகளுக்கு இடுபொருட்களை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி ஆஷா அஜித் உட்பட பலர் உள்ளனர்.

### 10, 11 ,12ஆம் வகுப்பு

# பொதுத் தேர்வு அட்டவணை!

## கோவையில் வெளியீடு!

கோவை, அக். 13–

10, 11 மற்றும் 12 ஆம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத் தேர்வு அட்டவணையை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி, நாளை வெளியிட உள்ளதாக தெரிவிக்கப் பட்டு உள்ளது.

பள்ளிக்கல்வித்துறை வெளியிட்டுள்ள அறிவிப்பில்,

தமிழ்நாடு முதலமைச்சர், துணை முதலமைச்சர் ஆகியோரின் அறிவுறுத்தல்படி, 10, 11, மற்றும் 12ம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத் தேர்வு அட்டவணையை, பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கோவையில் நாளை திங்கள்கிழமை வெளியிடவுள்ளதாக தெரிவிக்கப் பட்டுள்ளது.

நாளை 14ம் தேதி பொதுத் தேர்வு அட்டவணை வெளியீடு தமிழ்நாடு முதலமைச்சர் துணை முதலமைச்சர் ஆகியோரின் அறிவுறுத்தல்படி 10,11,12ம் வகுப்பு மாணவர்களுக்கான பொதுத் தேர்வு அட்டவணையை பள்ளிக் கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி கோவையில் வெளியிடுகிறார்.




# கண்ணீர் அஞ்சலி



எனது ஆருயிர் நண்பர்

திரு. முரசொலி செல்வம் அவர்களின்

மறைவால் வாடும் அவரின் குடும்பத்திற்கு
எனது ஆழ்ந்த இரங்கலைத்
தெரிவித்துக் கொள்கிறேன்

டாக்டர் கோ. விசுவநாதன்
நிறுவனர் மற்றும் வேந்தர்
வி ஐ டி பல்கலைக்கழகம்